புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# வேளிர் குலத்தின் கொடைத் திறம்

*த. லதா,*
*உதவிப்பேராசிரியார்,*
*தமிழ்த்துறை,*
*தொன் போஸ்கொ கல்லூரி,*
*ஏலகிரி மலை,*

ஆய்வுச்சுருக்கம்

தமிழனம் பழம்பெருமையும் மிகப் பெரிய சிறப்பையும் உடையது. அவர்கள் வாழ்வியல் என்பது மாபெரும் வரலாற்றினை உடையது. ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. எந்த ஒரு நாட்டின் இனத்தின் பண்பினை அறிய பண்பாட்டுச் சான்றுகள் மிக இன்றியமையாதது. தமிழனத்தின் பண்பாடுகளை அறிய கண்டறிய தமிழ் இலக்கியங்கள் பெரிதும் துணை நிற்கின்றது. பண்பாட்டின் சிறப்புகளான சமுதாய வாழ்வு , வீரம், சமயம்,அரசியல் போன்ற பண்பாட்டின் சிறப்பினை அறிய முதல் தொல்காப்பியம் , சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியங்கள் பண்பாட்டு தளங்களாக விளங்குகிறது. பண்பாட்டு அடையாளங்களில் தலைச்சிறந்ததாக போற்றப்படும் கொடையினயும் பற்றி நூல்களில் அதிக அளவில் பேசப்படுகிறது.சங்ககால மன்னர்கள் போரில் எவ்வளவு ஈடுபாடு மிகுந்தவர்களாக விளங்கினார்களோ அந்த அளவு கொடையிலும் முதன்மையாக விளங்கினார்கள். கொடை என்னும் இத்தகைய கொடைசிறப்பினைப்போற்றிய வேளிர் குடி குறுநில மன்னர்கள் வள்ளல் பாரியின் கொடையும் , அதியனின் கொடைச்சிறப்பும் அளவிடற்கரியது. குறு நில மன்னர்களாயினும் மிகப்பெரிய அளவில் கொடைகளைச் செய்து வந்தனர். இவ்விருவரும் பாண்டிய நாட்டைச் சேர்ந்த குறுநில மன்னர்கள். இவர்களின் கொடைத்திறம் உலகம் உள்ளளவும் பேசப்படும். இந்த கட்டுரையில் காண்போம்

## முன்னுரை

கடையெழுவள்ளல்களில் சிறப்பு மிக்கவனாக போற்றப்படுபவன். பறம்பு மலைக்குச்சொந்தக்காரன் வள்ளல் பாரி. சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இந்த மலைக்கு பிரான் மலை என்றும் பெயர் இந்தமலையின் பெருமை என்னவென்றால் கபிலர் முதலிய புலவர்களால் பாடப்பட்ட மலையாகும். இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த பறம்புமலையை ஆண்ட பெருமைக்குரியவன் வேளிர்குலத்தலைவன் பாரி என்பவன் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவன். சிறிய வேளிர் குலத்தலைவனாக இருந்தாலும் அவன் வீரத்திற்கும் கருணைக்கும் பெயர் பெற்று விளங்கினான். பாரியிடம் பழுத்த மரத்தை தேடிச்செல்லும் பறவையைப்போல் புலவர்கள், பாணர்கள் போன்றோர் தேடிசெல்வர். பலவிதமான பரிசுப் பொருள்களைப் பெற்று குளிர்ந்த மனதோடு அவனைப் புகழ்ந்து தம் பாடல்களில் பாராட்டிசெல்வர் .

## வேள்பாரியின் மலையும், கருணையும்

பாரி, பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன். (இது தற்காலத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரான்மலை என்று அழைக்கப்படுகிறது). இவனது மலையில் சுரபுன்னை மரங்கள் மிகுதியாக உண்டு. பூத்துக் குலுங்கும் இப்புன்னை மலர்களில் உள்ள தேனினை உண்டு வண்டுகள் இசைபாடும். நாட்டு வளம் காணச் சென்ற பாரி, வழியில் முல்லைக் கொடியொன்று பற்றுவதற்குக் கொழு கொம்பு இன்றி வாடியதைக்கண்டான். வழியோரத்துப்

படர்ந்திருந்த முல்லைக்கொடி தேரின் மீதுபட்டது. அம்முல்லைக் கொடி படர்வதற்குத் தனது தேரைக் கேட்பதாக நினைத்தான் பாரி. உடனே அம்முல்லைக் கொடியருகே தனது தேரை நிறுத்திவிட்டு வந்தான்.அக்கொடியானது தேர்மீது படர்ந்துகொண்டது. அவ்விடத்திலிருந்து தன் அரண்மனைக்கு அவன் நெடுந்தொலைவு நடந்தே வந்தடைந்தான். இவ்வாறான ஈகைக்குணம் நிரம்பியவன் பாரி. இவனது ஈகையின் பெருமை குறித்துப் புறநானூறு பலபடப் பேசுகிறது. இவனது ஈகைச் சிறப்புக் குறித்துக் கபிலர்,

" பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப் பதுவே" (புறம் 107)

எனவும்,

"முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்" (புறம் 110)

எனவும் பாரியைப் போற்றிச் சிறப்பிக்கிறார்.

பாரியிடம் செல்லும் அனைவருக்கும் பொருள் கிடைப்பது திண்ணம். அறிவில்லாதவரும், புல்லிய குணத்தாரும் சென்றாலும் பாரி உவந்து வழங்குவதைக் கடமையாகவுடையவன்.

" மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன், பாரி கை வண்மையே" (புறநா.106)

என்பதைக் கூறுகிறது இப்பாடல்

பாரியின் வீரமும் கொடையும்

பாரியின் பறம்பை அடைய நினைப்பவர்களே நீங்கள் பாரியின் பறம்பு மலையின் மீதுள்ள மரங்கள் தோறும் கட்டப்பட்ட யானையை உடையவர்களாயினும், எங்கும் பரப்பப்பட்ட தேரை உடையவராயினும் உங்களுடைய முயற்சியால் பாரியை வெற்றி கொள்ள முடியாது. நமது வாள் வலிமையாலும் வெல்லுதல் இயலாது. அவனை நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு நான் ஒரு வழியைக் கூறுகிறேன். வடித்து முறுக்கப்பட்ட நரம்பினையுடைய யாழை வாசித்து, மணம் பொருந்திய கூந்தலையுடைய நும் விறலியர் பின்வர, ஆடியும் பாடியும் செல்வீராயின் , அவன் உங்களுக்கு நாட்டையும், மலையையும் பரிசிலாகத் தருவான் என்பதை

" மரம் தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளின் கொள்ளலிர் கூளின் தாரலன்
யான் அறிகுவென், அது கொள்ளும் ஆறே
சுகிர் புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரை ஒலி கூந்தல் நும் விறலியர் பின்வர,
ஆடினிர் பாடினிர் செலினே,
நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே" 66 (புறம் 109)

என்ற பாடலின் வாயிலாகப் பாரியின் வீரத்தையும் கொடையினையும் அறிந்து கொள்ள முடிகிறது. என்ற பாடலின் வாயிலாகப் பாரியின் வீரத்தையும் கொடையினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

நெடுமான் அஞ்சி

நாம் உதவி பிறருக்கு செய்யும் பொழுதும், நெல்லிக்கனியைப். பார்க்கும் பொழுதும் நம் நினைவில் அதியமானும் அவ்வையாரும் கண் முன்னே தோன்றுவர் .அப்படிப்பட்ட புகழ் வாய்ந்த அதியனின் ஆற்றிய கொடைத்திறம்

நெடுமான் அஞ்சியைப் பற்றி ஔவையார் பல பாடல்களில் பாடியுள்ளார். நெடுமான் அஞ்சி செல்வ வளம் மிகுந்தவனாதலால் பலர்க்கும் பகுத்தளித்துத் தானும் அவர்களோடு உண்ணுபவன். படைவீரர் முதலியோரின் மேலாக தன்னை இரப்போர்க்கு வழங்குகின்றவன். அறிவில்லாதவர்களும் மகிழ்வதற்குத் துணையாகத் திகழ்பவன்.

*அதியனின் கொடைச் சிறப்பு*

*அதியமான் சேரனது மரபில் தோன்றியவன்.இவன் மழவர்|என்ற வீரமரபினருக்குத் தலைவனாக விளங்குகின்றான். அதியமானுக்கு அஞ்சி, அதிகமான், அதியமான், நெடுமானஞ்சி, எழினி என்ற பல பெயர்களும் இருந்தது. இவனைப் பற்றி முன்னமே பேசப்பட்டுள்ளது. எனினும் அவன் கொடைப் பண்பினை வெளிப்படுத்தும் பாடலை எடுத்துக்காட்டி கடையெழு வள்ளலின் ஒருவன் என்பதால் இங்கேயும் சுட்டப்பட்டுள்ளது.*

*அதியமானிடம் செல்லக் கூடிய விருந்தினர் ஒருநாள் அன்று, இருநாள் அல்ல, பலநாள் அவனோடு இருப்பினும் தலைநாள் எவ்வாறு விருந்தினரை உபசரித்தானோ அதே போல் தான் எல்லா நாளும் பார்த்துக் கொள்வான் அவன் பரிசில் கொடுப்பது நிச்சயம். அப்பரிசில் யானையினது கோட்டிடை வைத்த கவளம் எவ்வாறு யானையின் வாயிலிருந்து தப்பாதோ அதுபோல அதியன் பரிசும் தப்பாது என்கிறார் ஔவையார். இதனை,*

*“ஒரு நாள் செல்லலாம் இரு நாள் செல்லலாம்*
*பல நாள் பயின்று, பலரொடு செல்லினும்*
*தலை நாள் போன்ற விரும்பினன் மாதோ*
*இழை அணி யானை இயல்தேர் அஞ்சி*
*அதியமான், பரிசில் பெறூஉம் காலம்*
*நீட்டினும், நீட்டாது ஆயினும், களிறு தன்*
*கோட்டு இடை வைத்த கவளம் போலக்*
*கையகத்தது, அது பொய் ஆகாதோ” (புறம்-101)*

*வீட்டின் இறப்பில் செருகப்பட்டுள்ள தீக்கடைக் கோலைப் போல அவன் தன்னுடைய வலிமை வெளிப்பட வேண்டாத காலத்தில் அடங்கியிருத்தலிலும் வல்லவன். அத்தீக்கடைக் கோலைக் கடையும் போது அதனின்று கக்கப்பட்டுத் தோன்றும் மிக்க தீயைப் போல், ஆற்றல் வெளிப்படத் தோன்ற வேண்டிய காலத்தில் வெளிப்படுதலிலும் வல்லவன் இதனையே,*

*“ உடையன் ஆயின் உண்ணவும் வல்லவன்,*
*கடவர் மீதும் இரப்போர்க்கு ஈயும்,*
*மடவர் மகிழ்துணை, நெடுமாண் அஞ்சி*
*இல் இறைச் செரீஇய ஞெலிகோல் போல*
*தோன்றாது இருக்கவும் வல்லன், மற்றதன்*
*கான்றுபடு கணை எரிபோல*
*தோன்றவும் வல்லன் - தான் தோன்றுங்காலே” (புறம் 315)*

*என்று ஔவையார் பாடியுள்ளமை நோக்கத்தக்கது. மேலும் மற்றொரு பாடலில் ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.*

*ஔவையாரும் அதியனும்*

*தோள் சுமையானது ஒரு புறத்தே பதலை என்னும் கருவி தொங்குகின்றது. மற்றொரு புறத்தே துளையுடைய சிறிய முழா தொங்குகின்றது. இவற்றைச் சுமந்தவாறே எமக்கு உணவு இட்டு, கவிழ்ந்து கிடக்கும் உண்கலத்தை மலர்ந்த வல்லார் யாரெனச் சொல்லிச் சுரத்திடையே வந்திருந்து வருந்தும் விறலியே! நீ அவனிடத்துச் செல்வயாயின் அவன் நெடுந்தொகைவிடத்தும் அல்லன். பகைப் பலத்தை எரியூட்டியதால் எழுந்த கரியப் புகை மலையைச் சூழும் முகில் போல இளங்களிற்றைச் சூழும் பகைவர் தேயத்திருந்தான். பல வேற்படையையுடைய அதியமான் ஒரு பொழுதும் ஓயாமல் உண்ணவும் தின்னவும் படுதலால் ஈரம் காயாத உண்கலத்தில், மெழுகான் இயன்ற மெல்லிய அடைபோலக் கொழுத்த நிணம் மிகும்படி அளித்தல் வல்லன். உலகமே வறுமையுற்ற காலமாயினும் பாதுகாத்தலை வல்லன். அவன் தாள் வாழ்க இதனை,*

*“ ஒரு தலைப் பதலை தூங்க, ஒரு தலைத்*
*தூம்பு அகச் சிறு முழாத் தூங்கத் தூக்கி*
*கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார்? எனச்*
*சுரன்முதல் இருந்த சில் வளை விறலி!*
*செல்வை ஆயின், சேணோன் அல்லன்,*
*முனை சுட எழுந்த மங்குல் மாப்புகை*
*மலை சூழ் மஞ்சின், மழகளிறு அணியும்*
*பகைப் புலத்தோனே, பல்வேல் அஞ்சி,*

*பொழுது இடைப்படாஅப் புலரா மண்டை*
*மெழுகு மெல் அடையின் கொழுநிறம் பெருப்ப,*
*அலத்தள் காலை ஆயினும்*
*புரத்தர் வல்லன், வாழ்க, அவன் தாளே!"* (புறம் 103)

*என்னும் பாடல் அடிகள் கூறுகின்றன.*

*அதாவது, பதலை என்பது ஒரு தலை முகமுடைய ஒரு தோற்கருவியைக் குறித்தது. பகைப்புலத்தோனே என்றது, பகைவரிடத்துத் திறை கொண்ட பொருள் உடையனாதலின், நீ வேண்டியவை எல்லாம் தருதல் அவனுக்கு எளிதென்பதாம். சேணோன் அல்லன் என்றதால், அவன் பரிசில் நீட்டிப்பான் அல்லன் என்று பொருள்படும். கவிழ்ந்த மண்டை என்றதால் உணவு இடுவோர் இன்மையின் கவிழ்ந்து வைத்த உண்கலம் என்பதை உணர்த்திற்று. பொழுதிடைப்படாஅப் புலரா மண்டை எனக் குறிப்பிடுவது எந்நேரமும் அதியமான் உணவு அளித்து விருந்தோம்புவதால் உண்கலம் ஈரம் காயாமல் இருக்கும் தன்மையை உணர்த்தி நின்றது. சங்க இலக்கியமானது கொடையால் உயர்ந்த இவ்விரு வள்ளல்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறது.*

*முடிவுரை*

*கொடை என்ற அறத்தினையே மறந்து வாழும் பிறருக்கு ஒரு சிறிய கொடையை கொடுப்பதற்கும் யோசிக்கும் இன்றயை உலகில் மனிதர்கள் . அப்படியே செய்தாலும் அதை சமூக ஊடகங்களில் விளம்பரத்தை தேடும் உலகில் சங்க கால மக்கள் கொடையை அறத்தையே முதன்மையாக கொண்டு வாழ்ந்தனர். பழு மரம் தேடும் பறவையைப் போல் பாரியையும் அதியனையும் தேடிப் பல பரிசில்களைப் பெற்றதோடு மட்டுமில்லாமல் வாயாரப் புகழ்ந்து அவர்களின் பெருமையைப் பாடிச் சென்றனர். இவ்வகையில் பாரியும் முல்லைகொடியும் , அதியனும் நெல்லிக்கனியும் என்றென்றும் தமிழரின் கொடைக்குச் சான்றாக விளங்கும். இன்றைய சமூகத்தில் பிறரிடமிருந்து எதைப் பறித்து வாழலாம் என் நினைக்கும் உலகில் கொடுத்து உதவும் பண்பாட்டினை நாம் வளரும் பருவத்திலேயே விதைக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம், எனவே தமிழ் இலக்கிய நூல்களை வாசித்துஅதில் உள்ள பண்பாட்டுச் சிறப்பினை அறிதல் வேண்டும் என்பதே கட்டுரையின் முடிவாகும்.*

*துணை நூற்பட்டியல்*

*புறநானூறு துரைசாமிப்பிள்ளை ஔவை (உ.ஆ)*
*திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - 1970*
*சென்னை*

*பாரிவேள் - கி. வா. ஜகந்நாதன்*
*நக்கீரன் பதிப்பகம் சென்னை – முதற் பதிப்பு*

********* ********* ********** ********* ********* ********** ********** **********